செ.வெ.எண்-17 நாள்-12.12.2018

# அரியலூர் மாவட்டம், அணிகுதிச்சான் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமில் 148 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சத்து 9 ஆயிரத்து 518 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், அணிகுதிச்சான் (தெற்கு) கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நிறைவு நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (12.12.2018) நடைபெற்றது.

இம்முகாமில், வருவாய்த்துறையின் சார்பில் 115 பயனாளிகளுக்கு ரூ.4 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் மனைவரி பட்டா, நத்தம் பட்டா மாற்றம், நிலப்பட்டா மாற்றம் மற்றும் மனைவரிப்பட்டா நகல்களுக்கான ஆணைகளையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் முதியோர் ஓய்வுதியத்தொகை மற்றும் இதர உதவித்தொகைக்கான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 26 ஆயிரத்து 378 மதிப்பில் மழைத்துவான் மற்றும் விசைத்தெளிப்பான் கருவிகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 13 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 23 ஆயிரத்து 140 மதிப்பில் மழைத்தூவான், வீரியரக விதைகளையும் என ஆகமொத்தம் **148 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சத்து 9 ஆயிரத்து 518** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

**இம்முகாமில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

மக்களைத்தேடி திட்டங்கள் மக்களுக்காக நலத்திட்டங்கள் என்ற சீரிய நோக்கத்துடன் தமிழக அரசால் ஒவ்வொரு மாதமும் இருமுறை மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று (12.12.2018) அணிக்குதிச்சான் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நிறைவு நாள் சிறப்பாக நடைபெற்றது.

இம்முகாமில், வேளாண்மைத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளின் சார்பாக பொதுமக்கள் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் திட்ட விளக்கு அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் மக்கள் தொடர்பு முகாமில் அப்பகுதிக்குட்பட்ட பொதுமக்களுக்கு தமிழக அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களிலிருந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் மற்றும் விவசாய பெருங்குடி மக்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மழைக்காலங்களில் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், பெண்களுக்கென அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. எனவே, அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் அனைவரும் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பேசினார்கள்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தரராஜன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) அ.பூங்கோதை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) ஜெ.பாலாஜி, திட்ட இயக்குநர் (மகளிர்திட்டம்) லலிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) க.பழனிசாமி, உதவி இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) பா.சரண்யா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சங்கர் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

உடையார்பாளையம் கோட்டாட்சியர் ஜோதி அனைவரையும் வரவேற்றர். முடிவில், ஆண்டிமடம் வட்டாட்சியர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**